அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2023

# தமிழ்

# ஆண்டு 9

| | |
|---|---|
| **நேரம்:** 150 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** 03.06.2023 | **பக்கங்கள்:** 16 |

**சுட்டெண்:** | | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1 2 3 4

1. சூரியக்குடும்பத்தில் மூன்றாம் இடத்தில் அமைந்திருப்பது
   1. வெள்ளி
   2. செவ்வாய்
   3. புவி
   4. புதன்

2. தொல்காப்பியர் கூறும் ஆடலின்போது வெளிப்படுத்தப்படும் மெய்ப்பாட்டு வகைகளின் எண்ணிக்கை
   1. எட்டு
   2. ஏழு
   3. நான்கு
   4. இரண்டு

3. ஆந்தை அலறும். அது போல குயில்
   1. கூவும்
   2. கீச்சிடும்
   3. கரையும்
   4. பேசும்

4. கோல் கொண்டு ஆடப்படும் ஊரகக்கலை
   1. காவடி
   2. கும்மி
   3. கோலாட்டம்
   4. கரகம்

5. ஓடமாட்டான், ஓடவில்லை என்பன
   1. எதிர்மறைவினைகள்
   2. உடன்பாட்டுவினைகள்
   3. தன்வினைகள்
   4. பிறவினைகள்

6. சங்கமருவிய காலத்தை அடுத்து வரும் தமிழிலக்கிய வரலாற்றுக்காலம்
   1. ஐரோப்பியர்காலம்
   2. பாண்டியர்காலம்
   3. பல்லவர்காலம்
   4. சோழர்காலம்

7. நிலத்தில் புதையும்போது மண்ணின் வளத்தைக் கெடுப்பவை
   1. விதைகள்
   2. தாள்கள்
   3. நெகிழிகள்
   4. இலைகள்

1 2 3 4

8. எழில் + ஓவியம் என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. எழிலோவியம்
   2. எழில்ஓவியம்
   3. எழிலோவியம்
   4. எழில்லோவியம்

9. முகம்முறிதல் என்னும் மரபுத்தொடர் குறிப்பது
   1. வெறுப்படைதல்
   2. அடித்தல்
   3. பழித்தல்
   4. தாழ்ந்து நிற்றல்

10. பல பொருள்களைத் தொடர்ச்சியாகக் குறிக்கும்போது பயன்படுத்தப்படும் நிறுத்தற் குறியீடு
    1. முக்காற்புள்ளி
    2. காற்புள்ளி
    3. முற்றுப்புள்ளி
    4. அரைப்புள்ளி

11. தேடுகிறான் என்ற வினைமுற்றின் விகுதி
    1. கிறு
    2. தேடு
    3. ஆன்
    4. ன்

12. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன
    1. ஐம்பொறி
    2. ஐம்புலன்
    3. ஐந்திலக்கணம்
    4. ஐந்திணை

13. செயப்படுபொருள் குன்றியவினை
    1. பார்க்கிறான்
    2. நடந்தான்
    3. படிப்பான்
    4. எழுதினான்

14. திருகோணமலையில் ஏழு வெந்நீரூற்றுகள் அமைந்துள்ள இடம்
    1. கீரிமலை
    2. கன்னியா
    3. நிலாவெளி
    4. கற்சிலைமடு

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|

15. சாலை, தெரு, வழி எனும் பலபொருள் குறிக்கும் ஒரு சொல்
    1. பாதை
    2. வெளி
    3. ஓடை
    4. நிலை

16. சொல்லியத்தில் பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது
    1. இடைநிலை
    2. பயனிலை
    3. எழுவாய்
    4. வேற்றுமை

17. வியங்கோள் வினைமுற்றுக்கு ஓர் எடுத்துக்காட்டு
    1. ஓடு
    2. செய்க
    3. ஓடுங்கள்
    4. ஓடாதே

18. நாம் அக்கம்பக்கம் பார்த்து நடப்போம். இதில் அக்கம்பக்கம் என்பது
    1. இணைமொழி
    2. அடுக்குத்தொடர்
    3. அடுக்கிடுக்குத்தொடர்
    4. இரட்டைக்கிளவி

19. உலகமயமாதலினால் ஏற்படக்கூடிய தீமைகளுள் ஒன்று
    1. பண்பாட்டு ஒருமைத் தன்மை
    2. அரசியல் பயன்கள்
    3. பொருள்களின் தரம் குறைவடைதல்
    4. பல்லினப் பண்பாடு

20. வளர்தல் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. அழித்தல்
    2. தேய்தல்
    3. மறைதல்
    4. தொடர்தல்

21. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்
    1. கார்டுவெல்
    2. யி.யு.போப்
    3. அல்பேட் சுவைட்சர்
    4. வீரமாமுனிவர்

1 2 3 4

22. ஆற்றுமணல் என்பதன் சொற்பிரிப்பு
    1. ஆ + மணல்
    2. ஆற்று + மணல்
    3. ஆறு + மணல்
    4. ஆற்றும் + அணல்

23. நிலவன் பொரியல் உண்டான். இதில் பொரியல் என்பது
    1. இடவாகுபெயர்
    2. தொழிலாகுபெயர்
    3. பொருளாகுபெயர்
    4. சினையாகுபெயர்

24. ஆடற்கலையில் சிறந்த பெண்கள்
    1. கூத்தர்
    2. விறலியர்
    3. பாணர்
    4. பாடினி

25. நாம் நிறையுணவை உண்பது சாலச்சிறந்தது. இதில் வந்துள்ள உரிச்சொல்
    1. நாம்
    2. உண்
    3. நிறையுணவு
    4. சால

(25 X 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.**

1. முன்னேற்றம்: ______________________________

______________________________

2. சான்றுகள்: ______________________________

______________________________

3. நாட்குறிப்பு: ______________________________

______________________________

(3 X 2 = 6 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஊரகத் தெய்வ வழிபாடுகளுடன் தொடர்புடைய இசைக்கருவிகள் இரண்டு எழுதுக.

______________________________

2. இவ்வுலகத்தை விட மிகப்பெரியது என்று வள்ளுவர் எதனைக் கூறுகிறார்?

______________________________

______________________________

3. கணினிப் பயன்பாட்டில் தமிழ்மொழிக்கு உரிய இடத்தைக் கொடுத்துள்ள நிறுவனங்கள் இரண்டு எழுதுக.

______________________________

4. "உன்னிடம் அறம் கேட்டு வந்திருக்கிறேன்." இக்கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

______________________________

______________________________

5. இலக்கண வகையால் சொற்கள் எத்தனை வகைப்படும்? அவற்றுள் இரண்டுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

______________________________

______________________________

6. பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுசொல் உறுப்புகள் வருமாறு இரண்டு இறந்தகால வினைமுற்றுகள் எழுதுக.

______________________________

______________________________

7. மலை அன்ன தோள் என்ற உவமையணியின் உறுப்புகளை எழுதுக.

உவமானம்: ______________ உவமேயம்: ______________

உவமையுருபு: ______________ பொதுத்தன்மை: ______________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஓங்கி உயர்ந்த பனைமரமாம்
உச்சியில் ஓலைக் குருத்தழகாம்
பாங்காய் அதனைக் கொய்திடுவார்
பக்குவமாக வகிர்ந்திடுவார்
அழகாய் விசிறி கட்டிடுவார்
அலங்காரங்கள் செய்திடுவார்
ஒழுங்காய் கடையில் வைத்திடுவார்
ஒவ்வொன்றாக விற்றிடுவார்
மிக்க வெயிற் காலத்தில்
வியர்வை ஒழுகும் தேகத்தில்
மக்கள் விசிறி வாங்குவரே
மகிழ்வாய் இரவில் தூங்குவரே

- அழ. வள்ளியப்பா

1. பனைமரம் எப்படி வளர்ந்துள்ளதாகக் கவிஞர் கூறுகிறார்?

___

2. பனைமரத்தின் உச்சியில் இருப்பது என்ன?

___

3. விசிறி கடையில் எவ்வாறு வைக்கப்படுகிறது?

___

4. எக்காலத்தில் விசிறி உதவுகிறது?

___

(4 X 1 = 4 புள்ளிகள்)

5. **தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.**

**ஆங்கிலம்:**

1. I talk to my relatives in Tamil.
2. February 21st is the World’s Mother Language Day.
3. Maran likes home gardening.
4. The Tamils who live all over the world, are popular in many fields.
5. In Ezham, there were three different kingdoms such as Kootai, Yalpanam, and Kandy during the 16th century.

**யேர்மனி:**

1. Ich spreche mit meinen Verwandten auf Tamil.
2. Am 21. Februar ist der internationale Tag der Muttersprache.
3. Maaran mag es den Hausgarten zu machen.
4. Die weltweit lebenden Tamilen sind in den verschiedensten Bereichen erfolgreich.
5. Im 16. Jahrhundert gab es die drei Königreiche Kandi, Koottai und Yaalpaanam auf Ezham.

**நோர்வே:**

1. Jeg snakker på tamilsk med mine slektninger.
2. 21. februar er den internasjonale morsmålsdagen.
3. Maaran liker å jobbe i hagen.
4. Tamilene gjør vel i forskjellige yrker over hele verden.
5. På 1600-tallet var Kandy, Kottai og Yaalpanam de tre kongedømmene på Ezham.

**இத்தாலி:**

1. Io converso in Tamil con i miei parenti.
2. Il 21 febbraio è la giornata mondiale della lingua madre.
3. Maaran ha interesse nel fare l’orto domestico.
4. I tamil che vivono in tutto il mondo eccellono in diversi ambiti.
5. Nel sedicesimo secolo nell’ Ezham c’ erano tre regni Kandi, Koottei e Yaalpanam.

**நெதர்லாந்து:**

1. Ik praat in het Tamil met mijn familieleden.
2. Op 21 februari is het internationale moedertaaldag.
3. Maaran vindt het leuk om te tuinieren.
4. Tamils die over de hele wereld  wonen, blinken uit in verschillende beroepsgebieden.
5. In de 16de eeuw waren de 3 koninkrijken: Kandy, Koddai en Yaalpanam in Ezham.

**டென்மார்க்:**

1. Jeg taler tamilsk med mine  Familiemedlemmer.
2. Den 21. februar er international modersmålsdag.
3. Maaran er glad for at lave havearbejde. .
4. Tamilere, der lever overalt i verden, udmærker sig på mange forskellige områder.
5. I det 16. århundrede var der tre stater ved navn Kandy, Kottai og Jaffna på Ezham.

**சுவீடன்:**

1. Jag umgås med mina släktingar på tamil.
2. Den 21 februari är den internationella modersmålsdagen.
3. Maaran gillar att göra trädgård.
4. Tamiler som bor över hela världen utmärker sig i flera olika områden.
5. Under 1500-talet fanns det tre riken på Ezham vid Kandy, Kottai och Yaalpanam.

**பின்லாந்து:**

1. Puhun sukulaisten kanssa tamiliksi.
2. 21. helmikuuta vietetään äidinkielen päivää.
3. Maaran tykkää (koti) puutarhan tekemisestä.
4. Kaikkialla maailmassa asuvat tamililaiset ovat erinomaisia eri aloilla.
5. 1500-luvulla Ezham oli kolme valtakuntaa nimeltä Kandy, Kota ja  Yaalpanam.

**தமிழ்:**

1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

5. ____________________

(5 X 1 = 5 புள்ளிகள்)

**6. தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. மாந்தரும் இயற்கையும்
2. ஈழத்தமிழர் வரலாறு - ஐரோப்பியர் வருகை
3. மறக்கமுடியாத நிகழ்வு

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- நிகழ்வு
- மனத்தில் ஏற்பட்ட உணர்வு
- மறக்க முடியாமைக்கான காரணம்

____________________ (15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

ஓரினம் தமது உரிமைகளுக்காகப் போராடும் முறைகள் இரண்டு வகைப்படும். அவை ஆயுதப் போராட்டம், அமைதி வழிப் போராட்டம். இவற்றுள் ஆயுதம் ஏந்தாமல் போராடும் அமைதி வழிப்போரை உலகுக்கு அறிமுகப்படுத்திய நாடு இந்தியா. அந்த அமைதிப் போராட்டத்துக்குப் புதிய வடிவம் கொடுத்தது தமிழீழம். தமிழீழத்தில் நடந்த அமைதிப் போராட்டம் என்றதும் எங்கள் மனங்களில் நிற்பவர்கள் தியாகதீபம் திலீபனும் அன்னை பூபதியும் ஆவர். வல்லமை பொருந்திய இந்திய நாட்டுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து தம் உயிரை ஈகம் செய்தவர்கள் இவர்கள். தியாக தீபம் திலீபன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவத்துறை மாணவனாக இருந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர். இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து பன்னிரு நாள்கள் உண்ணா நோன்பிருந்தார். இவரது நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுத்தது இந்திய அரசு. அவை நிறைவேற்றப்படாமலே இவரது உயிர் பிரிந்தது. இவர் நீர்கூட அருந்தாமல் உண்ணா நோன்பிருந்து உலகில் இதுவரை யாரும் செய்திராத ஈகத்தைப் புரிந்தார். இவர் தாய்மண்ணுக்காக உயிரை ஈகம் செய்தது ஓர் அருஞ்செயலாகும்.

1. ஓரினம் எதற்காகப் போராடுகிறது?

   ______________________________________________

2. தமிழீழத்தில் இந்திய அரசுக்கு எதிராக உண்ணா நோன்பிருந்து உயிர் ஈகம் செய்தவர்கள் யாவர்?

   ______________________________________________

   ______________________________________________

3. தியாகதீபம் திலீபன் அவர்கள் எத்தனை நாள்கள் உண்ணா நோன்பிருந்தார்?

   ______________________________________________

   ______________________________________________

4. இவரது கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்றுக்கொண்டதா?

   ______________________________________________

   ______________________________________________

5. தியாகதீபம் திலீபன் அவர்கள் எத்துறையில் கல்வி கற்றார்?

   ______________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. வரவேற்புரையை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.**

அனைவருக்கும் வணக்கம்!

எங்கள் தமிழ்ப்பள்ளியின் வெள்ளிவிழாவுக்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் விழாக்குழு சார்பில் வருக! வருக! என வரவேற்கின்றோம்.

புலம்பெயர் நாட்டில் வாழ்ந்தாலும் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்கும் மாணவர்களே! உங்களை மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

தாய்மொழிக்கு அரும்பணியாற்றிவரும் ஆசிரியப் பெருந்தகைகளே!

மாணவர்களை ஊக்கப்படுத்தி, நிகழ்வைச் சிறப்பிக்க வருகை தந்திருக்கும் பெற்றோர்களே! உங்கள் அனைவரையும் மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.

1. தமிழ்ப்பள்ளியின் வெள்ளிவிழா நடைபெறுகிறது. (   )
2. மாணவர்கள் தமிழை ஆர்வத்துடன் கற்கிறார்கள். (   )
3. ஆசிரியர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றவில்லை. (   )
4. பெற்றோர் மாணவர்களை ஊக்கப்படுத்துகிறார்கள். (   )
5. இது ஒரு நன்றியுரை ஆகும். (   )

(5 x 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 04 | | | |
| 5 | 05 | | | |
| 6 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |